ஒருவரும், இந்த ஆண்டு ஒருவரும்தான் இறந்திருக்கிறார்கள். கடந்த 2013 ஆம் ஆண்டிலிருந்து பார்த்தால் ஒவ்வொரு ஆண்டும் ஒருவர்தான் இறந்திருக்கிறார். அதுகூட நடக்கக் கூடாது என்பதற்காகதான் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. முதலிலே சிறைக்கு வருகின்ற சிறைவாசிகளின் மன அழுத்தத்தைப் போக்குவதற்காக மனநல அலுவலர்களை அரசு நியமித்திருக்கிறது. அவர்களுக்குத் தேவையான அனைத்து மருத்துவ வசதிகளையும் இந்த அரசு செய்துகொடுத்துக் கொண்டிருக்கிறது. அவர்கள் உறவினர்களுடன் பேசுவதற்கான வசதி வாய்ப்புகளையும் இந்த அரசு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. இப்படி பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்திருக்கிறது. இருந்தாலும், நடைபெற்ற இந்தச் சம்பவத்திற்கு துறைரீதியான நடவடிக்கைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூரில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு நிவாரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன், சுருக்கமாக என்னவென்று சொல்லுங்கள். விஷயத்தைச் சொல்லி முடியுங்கள்.*

திரு. உ. மதிவாணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கீழ்வேளூர் தொகுதியில், கீழ்வேளூர் பெருமாள் கோயில் வடக்கு வீதியைச் சேர்ந்த கணேசன் என்பவரும், அவருடைய தம்பி ராஜூ என்பவரும் கடந்த 8-5-2018 ஆம் தேதியன்று மின்சாரம் தாக்கி இறந்துபோய்விட்டார்கள். இருவரும் அண்ணன்-தம்பிகள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அண்ணன், தம்பி இருவரும் இறந்துபோய்விட்ட நிலையில் வாடும் அவர்களது குடும்பத்தினருக்கு நிவாரண நிதி உதவி வழங்க வேண்டும். அதேநேரத்தில் (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் செய்திக்கு எல்லாம் நேரம் இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) எனக்கு நேரம் இல்லை, உட்காருங்கள். போதும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். திரு. மதிவாணன், நீங்கள் மாண்புமிகு*

முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் என்றால், தீர்ந்துவிட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் எல்லாக் கோரிக்கைகளையும் சொல்கின்றவரை எனக்கு நேரமில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டம், பெருமாள்கோவில் வடக்கு வீதியில் உள்ள வீட்டில் 8-5-2018 அன்று திரு. கணேசன் என்பவர் தொலைக்காட்சிப் பெட்டிக்கு கேபிள் இணைப்பு கொடுக்க முற்பட்டபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார். இதுசம்பந்தமாக காவல் துறையினர் விசாரணைக்கு வந்தபோது, அவருடைய சகோதரர் திரு. ராஜு என்பவர் தனது அண்ணன் எவ்வாறு இறந்தார் என்பதைக் காவலர்முன் காண்பிப்பதற்காக மீண்டும் தொலைக்காட்சிப் பெட்டிக்கு இணைப்பு கொடுக்க முற்பட்டபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார். இவ்விருவரும் உயிரிழந்த செய்தி அறிந்து நான் மிகவும் வேதனை அடைகின்றேன். இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த சகோதரர்கள் திரு. கணேசன் மற்றும் திரு. ராஜு ஆகியோரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டு, திரு. கணேசன் மற்றும் திரு. ராஜு ஆகியோரின் குடும்பத்திற்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, பொலக்குணம் கிராமம், வெடிவிபத்தில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு நிவாரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு என்ன நிகழ்வு குறித்துக் கொண்டுவருகிறீர்கள், சொல்லுங்கள்.

***திரு. கு. பிச்சாண்டி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, சு. பொலக்குணம் கிராமத்தில் 31-5-2018 அன்று கிணறு தூர்வாரும்